செ. கு. எண்: 142 நாள்:13.06.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 13.6.2013

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவர் 30.5.2013 அன்று கோயம்புத்தூர் தெற்கு வட்டம், போளுவாம்பட்டி ஒதுக்குகாடு, கரடிமடை பிரிவு அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த சுப்பையா குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சுப்பையா குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**